**பிரதேச அபிவிருத்தி வங்கி - 2017**

---

பிரதேச அபிவிருத்தி வங்கியின் ("வங்கி") 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2008 இன் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்ததி வங்கி அதிகாரச்சட்டத்தின் 33 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை ("சபை") பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் வங்கியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியது.

எனது முனைப்பழிப்பு கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

எனது அபிப்பிராயத்தில், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பிரதேச அபிவிருத்தி வங்கியின் நிதி நிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

#### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

1988 இன் 30 ஆம் இலக்க வங்கியில் சட்டம் மற்றும் அவற்றின் மீதான பின்தொடர் திருத்தங்களினால் வேண்டப்பட்ட தகவலின் பிரகாரம் இந்த நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 எல்கேஎஸ் / எஸ்எல்எவ்ஆர்எஸ் - இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) எல்கேஏஎஸ் 37 இன் பிரகாரம், ஏற்பாடுகள் நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள் போன்றன நேரம், மற்றும் கொடுப்பனவு தொகை பற்றிய நிச்சயமான தற்போதைய கடப்பாடாகவுள்ளது. எனினும், நியமத்தின் ஏற்பாடுகளிற்கு முரணாக, வங்கியானது மீளாய்வாண்டின் போது அமுல்படுத்தப்பட்டிருக்காத எதிர்பார்க்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களிலுள்ள 02 சந்தர்ப்பங்களில் செலுத்த வேண்டியுள்ள ஏனைய மேந்தலைச் செலவினத்தின் கீழ் பொறுப்புக்களாக ரூபா 15,330,707 தொகையை இனங்கண்டிருந்தது.

(ஆ) எல்கேஏஎஸ் 24 - தொடர்புடைய தரப்பின் வெளிப்படுத்தல்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் ரூபா 2,966,135 கூட்டுத்தொகையான வைப்புக்கள் மற்றும் ரூபா 4,496,180 கூட்டுத்தொகையான கடன்கள் போன்றவற்றை தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்களாக இனங்காணப்பட்டு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 29 இல் வாடிக்கையாளரால் வைப்பிலிடப்பட்ட ரூபா 9,000,000 பெறுமதியான காசோலையானது 2018 சனவரி 03 இல் தேறப்பட்டதுடன், இது மீளாய்வாண்டில் இனங்காணப்பட்டிருந்தது. அதற்கிணங்க, நிலையான வைப்பு பெறுமதியானது அதேதொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டதுடன் ரூபா 13,870 தொகையான அதற்கான வட்டி நிதிநிலைமைக் கூற்றில் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) சப்ரகமுவ மாகாணத்துடன் தொடர்பான 2017 திசெம்பர் மாதத்திற்கான ரூபா 11,162,064 தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரிச் செலவினங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதனால், உழைக்கும் போதே செலுத்தும் வரிச் செலவினம் மற்றும் உரிய பொறுப்பு அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) வாடிக்கையாளர்களின் வட்டி வருமானத்திடமிருந்தான பிடித்து வைத்தல் வரியின் தவறான கணிப்பீட்டால் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வட்டி மீதான செலுத்த வேண்டிய பிடித்துவைத்தல் வரி ரூபா 6,616,670 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) நிதிச் சேவைகள் மீதான மீளாய்வாண்டிற்கான பெறுமதி சேரி வரி தவறாக கணிப்பீடு செய்யப்பட்டமையால் மீளாய்வாண்டிற்கான பெறுமதி வரிச் செலவினம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலுத்த வேண்டிய பெறுமதி சேரி வரிச் செலவினம் போன்றன முறையே ரூபா 3,820,897 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.3 செலுத்தவேண்டிய கணக்குகள்

-------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 7,295,193 தொகையான செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி மீதியானது 2016 ஆம் ஆண்டிலிருந்து திருப்பப்படாமல் இருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ஆ) வட மேற்கு மாகாணம் மற்றும் ஊவா மாகாணத்திலுள்ள தலைமை அலுவலகம் மற்றும் 02 கிளை அலுவலகங்களிலுள்ள ஒட்டுமொத்த கடன்கொடுத்தோர்களின் மீதியானது, 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 167,509,776 மொத்த கடன்கொடுத்தோர்கள் மீதியில் 57 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தில் ரூபா 95,188,392 ஆகவிருந்தது. மேற்கூறப்பட்ட மீதியின் 79 சதவீதம் 1 வருட காலப்பகுதிக்கு மேலாக எந்த தீர்ப்பனவும் இல்லாது கணக்குகளிலிருந்த என அவதானிக்கப்பட்டது.

(இ) 2002 ஏப்ரல் 01 இல் மகாவலி அதிகாரசபையிடமிருந்து பெறப்பட்ட 02 கடன்கள் தொடர்பாக தொடர்ச்சியாக வட்டி ஏற்படுத்தப்பட்டிருந்த போதும், வங்கியானது 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை எந்த வட்டியையும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏற்படுத்தப்பட்ட மொத்த வட்டி ரூபா 36,764,636 ஆகவிருந்ததுடன் இது 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 33,468,491 ஆகவிருந்தது.

(ஈ) ஐக்கிய இராஜ்ஜிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (யூஎன்டிபி) மற்றும் முன்னைய றுகுனு அபிவிருத்தி வங்கி போன்றவற்றுக்கிடையில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம், யூஎன்டீபியினது வங்கியினால் வழங்கப்பட வேண்டிய கடன்களிற்கான உத்தரவாத நிதியாக கடனொன்றை வழங்கியிருந்து. எனினும், செயற்திட்டத்தில் இனங்காணப்பட்ட குறைபாடுகளினால் யூஎன்டீபியானது செயற்திட்டத்தை நிறுத்தியிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டில் பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு அறிவித்திருந்தது. 2013 ஏப்ரல் 30 இல் நடைபெற்ற கூட்டத்தில் இரு தரப்பினர்களும் 03 கட்ட அணுகுமுறையில் நிதியங்கள் மற்றும் அதற்கான வட்டி போன்றவற்றை திருப்புவதற்கு இனங்காணப்பட்டது. எனினும், வங்கியால் நிதியங்களையும் அதன் மீதான வட்டியையும் தீர்ப்பதற்கு எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க, 2017 திசெம்பர் 31 உத்தரவாத நிதியம் மற்றும் வட்டி போன்றவற்றின் செலுத்த வேண்டிய மீதி போன்றன முறையே ரூபா 11,003,743 மற்றும் ரூபா 20,719,172 ஆகவிருந்தது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மாணங்களுடன் இணங்காமைகள்

| சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுக்கிடையிலான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2016 இன் 01 ஆம் இலக்க வங்கி அதிகாரச்சட்ட வழிகாட்டிகள் | வங்கியானது 2017 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டிற்காக 10 சதவீத ஆகக்குறைந்த மூலதனப் போதுமை விகிதத்தையும் 2017 யூன் 30 இல் உள்ளவாறு 9.26 சதவீத ஆகக்குறைந்த மூலதனப் போதுமை விகிதத்தையும் பேணுவதற்கு தவறியது. 2017 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டுப் பகுதியில் ஆகக்குறைந்த மூலதன தேவைப்பாடானது 11.25 சதவீதமாக இருக்க வேண்டிய போதிலும் இது 8.67 சதவீதமாகவிருந்தது. |
| (ஆ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 114 ஆம் பிரிவு, 2016 ஏப்ரல் 29 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி மற்றும் 2003 யூன் -2 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சி சுற்றறிக்கையின் 8.7 ஆம் பந்தி | மீளாய்வாண்டின் போது வங்கியானது அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகள், மற்றும் சுற்றிக்கையின் பிரகாரம் ஆளணி வேதனங்களிலிருந்தான உழைக்கும் போதே செலுத்தும் வரியை கழிக்காமல் அதனுடைய சொந்த நிதியிலிருந்து ரூபா 118,496,598 தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரியை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தியிருந்தது. |
| (இ) 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ/2/2015 ஆம் இலக்க பொது முயற்சி சுற்றறிக்கை | ரூபா 98,900 கிரயமான தொலைபேசியொன்றை சுற்றறிக்கைக்கு முரணாக வங்கியின் நிதியத்தை பயன்படுத்தி தொழிற்பாட்டு பணியாளருக்காக வங்கி கொள்வனவு செய்திருந்தது. |
| (ஈ) வங்கி சுற்றறிக்கைகள் | |
| (i) 2016 திசெம்பர் 09 ஆந் திகதிய 2016/32 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கை | கொடுப்பனவுப் பற்றுச்சீட்டுக்களானது கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முன்னர் அலுவலகத்தரம் 3 III இலிருந்து 3 I வரையில் ஒருவரும் அலுவலகத்தரம் II அல்லது அதற்கு மேலுள்ள ஒருவரும் சான்றுறுதிப்படுத்த வேண்டும். எனினும், மேற்கொள்ளப்பட்ட மாதிரிக் கணக்காய்வில், ரூபா 15,436,719 தொகையான 10 கொடுப்பனவுப் பற்றுச்சீட்டுக்கள் தரம் II அல்லது அதற்கு மேலுள்ள அலுவலகரொருவரால் சான்றுறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 2010 திசெம்பர் 25 ஆந் திகதிய 2010/22 ஆம் இலக்க நிர்வாகச் சுற்றறிக்கை | பதவியணி கடன்களை வழங்கும் போது கழிக்கப்பட்டு தலைமை அலுவலகத்திற்கு திருப்பப்படும் 1 சதவீதக்கடன் உத்தியோகத்தர் கடன் உறுதிப்பாட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். எனினும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தலைமை அலுவலகத்திற்கு திருப்பாமல் ரூபா 1,713,493 கிளைக் கணக்குகளிலிருந்தது. |

(உ) வங்கியின் பெறுகை கையேடு

| | |
|---|---|
| (i) 5.4.6 ஆம் பிரிவு | ஒப்பந்தப் பெறுமதியின் ஆகக்குறைந்த 5 சதவீதமான செயலாற்றல் பிணையானது 03 வேலைகள் ஒப்பந்தங்களிற்காக பெறப்பட்டிருக்கவில்லை |
| (ii) 8.9 ஆம் பிரிவு | ரூபா 250,000 பெறுமதியை விஞ்சிய ஒப்பந்தங்களிற்காக 05 சந்தர்ப்பங்களில் முறையான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

----------------------------------

### 3.1 நிதிசார் விளைவுகள்

----------------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வங்கயின் தொழிற்பாடுகள் அதற்கு முன்னைய ஆண்டின் ரூபா 641,288,212 தொகையான வரிக்குப் பின்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 1,283,929,506 வரிக்கு பின்னரான தேறிய இலாபத்தை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 642,641,294 முன்னேற்றமொன்றை சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் போது ரூபா 22,222 மில்லியனால் கடன்கள் மற்றும் முற்பணங்கள் அதிகரித்தமையால் மீளாய்வாண்டின் போது ரூபா 4,573 மில்லியனால் கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான வட்டி வருமானம் அதிகரித்தமை மற்றும் ரூபா 7,844 மில்லியனால் நிலையான வைப்புக்கள் அதிகரித்தமையால் ரூபா 2,179 மில்லியனால் நிலையான வைப்புக்கள் மீதான வட்டி வருமானம் அதிகரித்தமை இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணங்களாகவிருந்தது.

முன்னைய 04 ஆண்டுகள் மற்றும் மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளை பகுப்பாய்வு செய்யும் போது 2013 ஆம் ஆண்டிலிருந்த வரிக்குப் பின்னரான தேறிய இலாபம் ரூபா 191,704,369 மீளாய்வாண்டில் ரூபா 1,283,929,506 மில்லியனாகவிருந்தது. ஊழியர்களின் ஊதியங்கள், பெறுமானத்தேய்வு மற்றும் வரியினை சரிப்படுத்திய பின்னர் வங்கியின் பெறுமதி சேர்க்கை ரூபா 8,579 மில்லியனாகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டின் பெறுமதி சேர்க்கை ரூபா 7,015 மில்லியனாகக் காணப்பட்டது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

------------------------------------------------------------------

#### 3.2.1 கணக்கீட்டு விகிதங்கள்

-----------------------------------------

துறைரீதியான விகிதங்களுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்காக வங்கியின் முக்கிய கணக்கீட்டு விகிதங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சராசரி அனுமதியளிக்கப்பட்ட வங்கி விகிதமான 3.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டிற்காக உயர் தேறிய வட்டி எல்லை 6.45 சதவீதம் அவதானிக்கப்பட்டது.

(ஆ) 54.4 சதவீத துறைவிகிதத்துடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டிற்கான வங்கியின் செயற்பாட்டுச் செலவினங்களுக்கான பதவியணினர் கிரயம் 72.70 சதவீதமாகக் காணப்பட்டது.

### 3.2.2 வங்கியின் திரவத்தன்மை இடைவெளி

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்த முதிர்ச்சிகளுடனான நிதிச்சொத்துக்கள் மற்றும் நிதிப்பொறுப்புக்களின் பகுப்பாய்வானது, 3 மாதங்கள் வரை 3-12 மாதங்கள் வரை மற்றும் 05 ஆண்டுகளிற்கு மேலாகவுள்ள நிதிப்பொறுப்புக்களானது மொத்த நிதிச்சொத்துக்களை விட மிகை தொலைவிலுள்ளதுடன் திரவ இடைவெளியானது முறையே ரூபா 5,042,356,201, ரூபா 11,007,939,222 மற்றும் 18,145,882,192 ஆகவிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

### 4.1.1 செயற்பாடுகள் மற்றும் மீளாய்வு

(அ) 2008 இன் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின் பிரகாரம், விவசாயம், கைத்தொழில், வியாபாரம், வணிகம், கால்நடை, மீன்பிடி நடவடிக்கைகள் மற்றும் மகளீர் அதிகாரம் என்பவற்றின் அபிவிருத்தியை முன்னேற்றுவதன் மூலம் இலங்கையின் ஒட்டுமொத்த பிராந்திய பொருளாதார அபிவிருத்திக்கு வசதியளித்தல் மற்றும் நுண் நிதி நிறுவனங்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் என்பவற்றிற்கு நிதிசார் உதவியை வழங்குதல் போன்றன வங்கியின் நோக்கமாகும்.

மேற்குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைவதில் 2017 ஆம் ஆண்டின் போது வங்கியின் செயலாற்றல் மீது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2017 ஆம் ஆண்டிற்காக ரூபா 125,552 மில்லியன் மொத்தக் கடன் இலக்கிலிருந்து 50 சதவீதம் மாத்திரம் பிராந்திய அபிவிருத்தி வங்கி அதிகாரச்சட்டத்தால் சிபாரிசு செய்யப்பட்ட விவசாயம், கைத்தொழில், வியாபாரம் மற்றும் வர்த்தகம் மற்றும் போக்குவரத்து விடயங்களிற்காக விசேட கவனஞ் செலுத்தப்பட்டதுடன் உண்மையாக வழங்கப்பட்ட கடன்களிலிருந்து அதே சதவீதம் அந்த விடயங்களிற்கு வழங்கப்பட்டிருந்தது.

(ii) அதிகாரச்சட்டத்தால் விசேடமாக சிபாரிசு செய்யப்படாத வீடமைப்பு விடயங்களிற்கான மொத்த கடன்களின் 27 சதவீதம் மற்றும் 25 சதவீதத்தை வங்கி இலக்கிட்டு வழங்கியிருந்தது.

(ஆ) வங்கியின் கூட்டிணைந்த திட்டத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது வருமானத்திற்கான கிரயம் மற்றும் உரிமையாண்மை மீதான திரும்பல் முறையே 8.6 சதவீதத்திலிருந்து 22 சதவீதத்தால் முறையே பாதகமாக வேறுபட்டது.

(இ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள் ரூபா 130,325 மில்லியனாகவிருந்ததுடன் அதில் ரூபா 4,191 மில்லியன் கூட்டுத்தொகையான முற்பணங்கள் அல்லது 3.22 சதவீதம் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு செயற்பாடற்ற வகைப்படுத்தலிருந்தது. மேலும், செயற்பாடற்ற கடன் மீதியில் ரூபா 377 மில்லியன் கூட்டுத்தொகையானது 2018 பெப்ரவரி 28 இல் உள்ளவாறு செயற்பாடற்றதாகவிருந்தது.

மேற்கூறப்பட்ட செயற்பாடற்ற கடன்கள் மற்றும் முற்பணங்களின் வகைப்படுத்தல்கள் பின்வருமாறுள்ளது.

| நிலுவைக் காலப்பகுதி | வகைப்படுத்தல் | 2017.12.31 இல் உள்ளவாறான செயற்பாடற்ற மீதி (ரூபா.மில்லியன்) | மொத்த செயற்பாடற்ற மீதியின் சதவீத தொகை % | 2018.02.28 இல் உள்ளவாறான செயற்பாடற்ற மீதி (ரூபா.மில்லியன்) | மொத்த செயற்பாடற்ற மீதியின் சதவீத தொகை % |
|---|---|---|---|---|---|
| 3-6 மாதங்கள் | விசேடமாக குறிப்பிடப்பட்ட கடன்கள் | 986 | 23 | 240 | 64 |
| 6-12 மாதங்கள் | உப நியமப்படுத்தப்பட்ட கடன்கள் | 855 | 21 | 23 | 6 |
| 12-18 மாதங்கள் | ஐயக் கடன்கள் | 533 | 13 | 22 | 6 |
| 18 மாதங்களிற்கு மேல் | நட்டக் கடன்கள் | 1,787 | 43 | 92 | 24 |
| **மொத்தம்** | | **4,191** | **100** | **377** | **100** |

### 4.2 முகாமைத்துவ நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கை உழவு இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கு வழங்கப்பட்ட கடனிலிருந்து ரூபா 177,000 அறவிடுவதற்கு தவறிய வாடிக்கையாளருக்கு எதிராக 2003 ஆம் ஆண்டில் வங்கியால் தொடுக்கப்பட்ட வழக்கு தொடர்பாக 2017 திசெம்பர் 31 வரை வழக்கறிஞர் கட்டணங்களாக ரூபா 637,310 ஐ வங்கி ஏற்படுத்தியிருந்தது.

(ஆ) கூட்டிணைந்த சமூக பொறுப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இரண்டு பௌத்த ஆலயங்களின் நிர்மாணத்திற்காக 2017 மே இல் அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தரொருவரால் தயாரிக்கப்பட்ட ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவீட்டுப் பட்டியல் இல்லாமல் ரூபா 1,500,000 ஐ வங்கி செலுத்தியிருந்தது. மேலும், பிரதேச செயலகங்களானது குறித்த நோக்கத்திற்காக நிதியங்களை பயன்படுத்தியிருக்காததுடன் வங்கி நிதியங்களை பயன்படுத்துவது தொடர்பாக வங்கியால் எந்தவித பின்தொடர் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லையென வெளிப்படுத்தப்பட்டது.

(இ) 2017 திசெம்பர் 19 ஆந் திகதிய செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், கல்வி அமைச்சுடன் இணைந்து வங்கியால் மேற்கொள்ளப்பட்ட சுகாதார வசதிகள் உயர்த்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மத்திய, ஊவா, தென் மற்றும் வடமேல் மாகாணங்களிலுள்ள 09 பாடசாலைகளின் நிர்மாண செயன்முன்னேற்றம் 25 சதவீதமாகவிருந்தது என குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், நிர்மாண வேலைகள் 2018 சனவரி 24 வரையிலும் தொடங்கப்பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது.

## 4.3 செயற்பாட்டு பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒவ்வொரு காலாண்டு இறுதியிலிருந்து 10 நாட்களிற்குள் உரிய தகவலை சமர்ப்பித்தலின் மீது பொது திறைசேரியால் சிரேஸ்ட பிரஜாவுரிமை வைப்புக்களிற்கான வட்டி உதவித் தொகையானது மீளளிக்கப்பட வேண்டும். எனினும், 2 நாட்கள் தொடக்கம் 26 நாட்கள் வரையிலான வீச்சில் வேண்டுதல்களின் தாமதமானது அவதானிக்கப்பட்டது. மூன்றாவது காலாண்டு இறுதிவரையிலும் பெறவேண்டிய வட்டி உதவுதொகை ரூபா 329 மில்லியன் தொகையானதுடன் இது பொது திறைசேரியினால் 2018 பெப்ரவரி 29 வரையிலும் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தலைமை அலுவலகத்திற்கு உத்தியோகத்தர்களை நியமித்த நேரத்தில் அவர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட உத்தியோகத்தர் பிணை வைப்புக்களை திருப்புவதற்கு வேண்டப்பட்டிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 6 மாகாணங்கள் தொடர்பான உத்தியோகத்தர் பிணை வைப்பு நிதியக் கணக்கிலிருந்த மீதி ரூபா 245,151 கூட்டுத்தொகையாகும்.

(இ) வங்கியானது வழங்குனர்களை பதிவு செய்வதற்காக 2016 நவம்பர் 08 இல் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை விளம்பரத்தின் பிரகாரம், அவர்களுடைய பதிவுகளை கருத்திற் கொள்வதற்காக ஐசீரீஏடி பதிவுச் சான்று, முன்னைய 3 ஆண்டுகளிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள், முன்னைய வழங்குனர்களிடமிருந்தான சீஆர்ஐடீ அறிக்கைகள் பெறப்பட வேண்டும். எனினும் மேற்கூறப்பட்ட ஆவணங்கள் வங்கியால் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இரத்தினபுரி - நகர கிளை அலுவலகமானது 2017 ஆகஸ்ட் 01 இல் திறக்கப்பட்டிருந்த போதிலும், நிர்மாணிக்கப்பட்ட ஏரீஎம் அறையானது வளிப் பதனாக்கி முறைமை இன்மையால் 2018 ஆகஸ்ட் 28 இலும் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

2013 ஒக்தோபர் 21 ஆந் திகதிய 10/6/163 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை கடிதத்தின் பிரகாரம், வங்கியானது குத்தகைக் காணியில் இமடுவ கிளையை நிர்மாணிப்பதற்கு அங்கீகாரம் வழங்கியிருந்தது. எனினும், கிளையானது 2018 பெப்ரவரி 28 வரையிலும் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. மேற்கூறப்பட்ட காணியின் குத்தகை உடன்படிக்கையானது 2018 பெப்ரவரி 28 வரையிலும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

## 4.5 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 2721 ஆக இருந்ததுடன் தற்போதுள்ள பதவியணி 2395 ஆகவிருந்தது. அதற்கிணங்க, 326 வெற்றிடங்கள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவதானிக்கப்பட்டது.

(ஆ) விசேட உதவி பொது முகாமையாளர் தரத்தில் ஒரு மிகை உத்தியோகத்தரும் அலுவலக உதவி மற்றும் ஊழியர் தரத்தில் 45 மிகையான உத்தியோகத்தரும் அவதானிக்கப்பட்டது.

**4.6 வங்கியின் சந்தைப்பங்கு**

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

வங்கியின் சந்தைப்பங்கானது வைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு 12.65 சதவீதத்திலிருந்து 14.35 சதவீதத்திற்கு 13 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது கடன்கள் மற்றும் முற்பணங்களை அடிப்படையாகக் கொண்டு 20.27 சதவீதத்திலிருந்து 20.37 சதவீதத்திற்கு 0.5 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 பெறுகை மற்றும் ஒப்பந்த செய்முறை**

**5.1.1 ஒப்பந்த நிர்வாகத்தின் குறைபாடுகள்**

வங்கியால் பின்பற்றப்பட்ட பெறுகை செய்முறையில் பின்வரும் காலதாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பேரதேனியா கிளைக்கான ஏரீஎம் அறையின் உட்புற வேலைகள் மற்றும் நிர்மாண முன்னேற்றம்

(i) அதிகுறைந்த மனுதாரர் விலை மனு ஆவணங்களிலுள்ள சிறிய விலகல்களால் நிராகரிக்கப்பட்டிருந்தார்.

(ii) வேலை ஏற்றுக்கொள்ளல் கடிதத்தின் பிரகாரம், நாளொன்றுக்கு ரூபா 3,000 வீதத்தில் தாமதமான வழங்கல்கள் மீது தண்டப்பணம் விதிக்கப்பட வேண்டிய போதிலும், வங்கியானது 28 நாட்கள் காலதாமதத்துடனான வழங்கல்களிற்காக தண்டப்பணங்களை விதித்திருக்கவில்லை. எனினும், முறையான ஒப்பந்த உடன்படிக்கையானது கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(iii) ரூபா 180,426 பெறுமதியான அளவீட்டுப் பட்டியல்களிலுள்ள 13 விடயங்களானது ஒப்பந்தகாரரால் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது.

(ஆ) இரத்தினபுரி நகர கிளை அலுவலகத்திற்கான உள்ளக பிரித்தல் வேலைகள்

ரூபா 402,709 பெறுமதியான அளவீட்டுப் பட்டியல்களிலுள்ள ஒன்பது விடயங்கள் ஒப்பந்தகாரரால் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பிரதேச அபிவிருத்தி வங்கி தலைமை அலுவலகத்தின் உள்ளக வேலை பிரித்தல் வேலைகள் மற்றும் கீழ் மாடியில் தளபாடங்களை வழங்கல்

(i) 2017 மார்ச் 21 இன் நிறைவேற்று பெறுகை குழு தீர்மானத்திற்கு முரணாக, ரூபா 207,703 பெறுமதியான மேலதிக வேலைகளானது மனிதவள திணைக்களத்தின் தலைமையிடமிருந்து அனுமதியை பெற்றுக்கொள்ளாமல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) வேலை ஏற்றுக்கொள்ளல்கள் கடிதத்தின் பிரகாரம், தாமதமான வழங்கல்களிற்காக நாளொன்றுக்கு ரூபா 3,000 வீதத்தில் தண்டப்பணங்கள் விதிக்கப்பட வேண்டிய போதிலும், வங்கியானது 32 காலம் தாழ்த்திய வழங்கல்களிற்காக தண்டப்பணங்களை விதித்திருக்கவில்லை.

(ஈ) பல்வேறுபட்ட கூறுகளை உள்ளடக்கியுள்ள பெரிய ஒப்பந்தங்கள் தனிப்பட்ட துண்டுகளினூடாகவும் பொதிகளினூடாகவும் வகைப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் பல்வேறுபட்ட சந்தை இயலுமைகள் எதிர்கொள்வதற்கு தனித்தனியாக கொள்வனவு செய்யப்பட வேண்டும். எனினும், பல்வேறுபட்ட கூறுகளை உள்ளடக்குகின்ற 03 பெறுகைகள் தொடர்பில் இது இணங்கியிருக்கவில்லை. ஆகையால், பதிலளிக்கப்பட்ட சதவீதம் குறைந்ததாக இருந்தது.

## 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமான மற்றும் செலவினங்களுக்கிடையில் 2 சதவீதம் தொடக்கம் 54 சதவீதம் வரையான வீச்சில் சாதகமான முரண்கள் அவதானிக்கப்பட்டிருந்தமையால் பாதீடானது வினைத்திறனான நிதிக் கட்டுபாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட வங்கியின் முறைமைகள் மற்றும் கட்டுபாடுகளிலுள்ள பலவீனங்கள் காலத்திற்குக் காலம் வங்கியின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாட்டு பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | - கொடுக்கல் வாங்கல்கள் சரியான கணக்கில் பதிவு செய்யாமை<br>- நீண்டகால நிலுவை மீதிகளை தீர்ப்பதிலுள்ள தவறுகள்<br>- வங்கியின் தகவல் முறைமையின் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் |
| (ஆ) பெறுகைகள் | பெறுகை வழிகாட்டல்களுடன் இணங்காமை |
| (இ) கடன் நிர்வாகம் | அறிமுகப்படுத்தப்பட்ட நடைமுறைகளுடனான இணங்காமை மற்றும் நீண்டகால நிலுவை மீதிகளை அறவிட தவறியமை. |